REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 23உ சனி (7—1—56) ★ ★ வெளியூர்: மார்கழி 24உ ஞாயிறு (8—1—56) [இதழ் 177

இன்றைய மாணவர்கள்

'முகவரி இல்லா கடிதஉறை போன்றவர்கள்'

போபால் முதன் மந்திரி கருத்து

இந்தூர், ஜன. 6—

"இந்தக் கால மாணவர்கள், முகவரி இல்லாத கடிதஉறை போன்றவர்கள்; ஏனெனில், அவர்கள் தாங்கள் கல்வி பயிலும் காலத்

(4-ம் பக்கம் பார்க்க)

தேவிகுளம்-பீர்மேடு கேரளத்திற்குத்தானும்

கூடலூரும் காணிக்கையாகுமாம்!

தமிழர் கோரிக்கைக்கு காங்கிரஸ் நால்வர் குழுவின் மாபெரும் துரோகம்

மாநில சீரமைப்புக் குழுவின் சிபாரிசுப்படி, திரு-கொச்சி தென் பகுதியில் உள்ள ஐந்து தமிழ் தாலுகாக்களும் சென்னையுடன் சேர்க்கப்பட்டுவிடுமாம்; ஆனால், தேவிகுளம்—பீர்மேடு, குழுவின் கருத்துப்படியே கேரளத்திலேயே இருந்து வருமாம்.

மாநில சீரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் மீது இறுதியான முடிவுகூறும் பொறுப்பிலுள்ள காங்கிரஸ் நால்வர் குழு மேற்குறிப்பிட்டுள்ள தீர்ப்பளிக்கப் போகிறதாம்.

நீலகிரியை ஒட்டியுள்ள கூடலூர் பகுதியைக் கேரளத்திற்கும், சந்திரகிரி ஆற்றுக்கு வடக்கிலுள்ள காசர்கோடு பகுதியை கர்னாடகத்திற்கும் ஒப்படைத்துவிட, நால்வர் குழு முடிவு கட்டிவிட்டதாம்.

நாடு முழுமையிலும் வேலை நிறுத்தம்!

முற்றுகை நிலை பிரகடனம்

தொழிலாளர் தலைவர்கள் கைது

சாண்டியாகோ, ஜன 6—

ஜன. 9-ந் தேதியன்று நாடு முழுமையிலும் பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்போவதாக சிலி நாட்டின் தொழிலாளர் சங்கம் முடிவு செய்ததையடுத்து, சிலி சர்க்கார் 'முற்றுகை நிலை'யைப் பிரகடனம் செய்துள்ளது; தொழிலாளர் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனராம்.

இரண்டு இலட்சம் தேயிலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

உத்தேச கூலிக் குறைப்பை எதிர்க்கும் ஏற்பாடாம்

கல்கத்தா, ஜன. 6—

ஏறத்தாழ இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் டோர்ஸ் தேயிலைக் காடுகளில் வேலை செய்து வருகின்றனர்.

இத்தேயிலைக் காடுகள் ஆங்கிலேயர்களுக்கும்—இந்தியர்களுக்கும் உரிமையுடையதாகும்.

தொழிலாளர்களுக்குத் தரப்பட்டு வரும் கூலியில் மூன்று அணா வீதம் குறைக்கப்போவதாகத் தோட்ட முதலாளிகள் யோசித்து வருகிறார்களாம்.

அக்கூலிக் குறைப்பை எதிர்க்கவே ஜனவரி 15-ந் தேதி முதல் கொண்டு வேலை நிறுத்தம் செய்யப்போவதாக தொழிற் சங்கம் முன்அறிவிப்பு செய்திருக்கிறது.

இந்தியாவெங்கணும் பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

சம்பள வெட்டுத் திட்டத்தை எதிர்த்து நடவடிக்கை

புதுடில்லி, ஜன. 6—

இந்தியாவின் முக்கியமான நகரங்களில் எல்லாம் உள்ள பாங்கி ஊழியர்களில் மிகப் பெரும்பாலானோர், பல்லாயிரக்கணக்கில் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்; பாங்கி முதலாளிகளால் உத்தேசிக்கப்பட்டுள்ள 'சம்பள வெட்டு'த் திட்டத்தை எதிர்த்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புதுடில்லி, பம்பாய், கல்கத்தா, நாகபுரி, கான்பூர், பூனா, கட்டாக், ஸ்ரீநகர், கௌஹாத்தி, பெங்களூர், சென்னை, கர்னூல், திருவனந்தபுரம, மதுரை, கோவை, பேர்ஹாம்பூர்—இப்படி இந்தியாவெங்கணுமுள்ள பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால், பாங்கிகள் வேலை செய்ய முடியாது நிலைநின்றுவிட்டன.

சென்னையில் உள்ள பல்வேறு பாங்கிகளும் வேலை செய்ய முடியவில்லை. சுமார் 25 பாங்கிகளைச் சேர்ந்த 2,500 ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கு பெற்றனர்.

பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும், ரிசர்வ் பாங்கி ஊழியர்கள் அகில இந்திய சங்கத்தின் துணைத் தலைவரைக் கைது செய்ததை எதிர்த்து சென்னை ரிசர்வ் பாங்கி கிளை ஊழியர்கள் 7-ந்தேதி முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று தெரியவருகிறது

சிவகங்கை கல்லூரியில் வேலை நிறுத்தம்

தேர்வுப் பரீட்சையில் மாணவர்களை நிறுத்தியதை எதிர்த்து, சிவகங்கை இராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்

தகுதிவாய்ந்த மருத்துவ ஆசிரியர்களை நியமிக்காததின் எதிரொலி

வகுப்புகளுக்குச் செல்ல மாணவர்கள் மறுப்பு

திருவனந்தபுரம், ஜன. 6—

இங்கு நடைபெற்று வரும் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறது. இக்குறைபாட்டைக் களையும் நோக்கத்துடன், அங்கு பயின்று வரும் மாணவர்கள், தங்கள் தங்கள் வகுப்புகளுக்குப் போவதில்லை என முடிவு கட்டியுள்ளனர்.

திரு—கொச்சி கொச்சியில் நடைபெற்று வரும் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி இது ஒன்றேயாகும். நான்காண்டு பட்டப் படிப்புக்கு அக்கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அக்கல்லூரியில் முதல் பிரிவாகச் சேர்ந்து கற்றுவரும் மாணவர்களின் முழுக் கல்வி இன்னமும் முற்றுப் பெறாத நிலையிலேயே இருக்கிறது.

இந்தியத் தூதுவர் நியமனத்தில் மலாயா தமிழர்கள் அதிருப்தி

வடநாட்டாரை வரவேற்பதில் தமிழர்களைவிட வடநாட்டினரே மிகுந்திருந்தனர்

கோலாலம்பூர், ஜன. 6—

மலாயாவின் இந்தியப் பேரரசின் துணைத் தூதுவராக வடநாட்டினரான பி. தேசாய் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரை வரவேற்க நடைபெற்ற விழாவில், தமிழர்களைவிட வடநாட்டினரே மிகுதியாகக் கலந்துகொண்டிருந்தனர்.

தூதுவராக இருப்பவரும் ஒரு வடநாட்டினரேயாவர்.

மலாயாவில் உள்ள இந்தியர்களில் பெருந்தொகையினர் தென்னாட்டுத் தமிழர்களாகவே இருந்துவருவதால், ஒரு தமிழரையே இந்தியத் தூதுவராக நியமிப்பது நலம் பயக்கக்கூடியதாகும் என்பது மலாயா தமிழர்களின் நீண்டகால விருப்பமாகும். இவ்விருப்பத்தை மதியாது ஒரு வடநாட்டவரான தேசாயை துணைத் தூதுவராக நியமித்திருப்பது கண்டு தமிழர்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

இந்தியப் பேரரசின் பிடிவாத குணத்தைக் கண்டித்தும் பரவலாகப் பேசப்பட்டுவருகிறது.

'பண்டித நேரு மராத்தியருக்கு நீதி வழங்குவார் என நம்புகிறேன்'

'பம்பாயை மராட்டியத்துடன் இணைக்கும் பொறுப்பை அவரிடமே தருகிறேன்'

சங்கர்ராவ் தேவ் அறிவிப்பு

பூனா, ஜன. 6—

சம்யுக்த மராட்டியம் வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை; ஆனால், அது எல்லா மக்களுடைய நல்லெண்ணத்துடனும் உருவாக்கப்பட வேண்டும்;

"தங்கள் 'தலைநகர'மான பம்பாய் நகரை மத்திய சர்க்கார், எந்த ஒரு தேசியக் காரியத்திற்காகவும் உபயோகித்துக்கொள்வதை மராட்டியர்கள் தடைசெய்ய மாட்டார்கள்"

என்று, சம்யுக்த மராட்டிய பரிஷத் தலைவரான சங்கர் ராவ் தேவ் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், "பம்பாய் நகரை மராட்டியத்துடன் இணைப்பதற்குரிய காலத்தையும், முறையையும் வரையறுக்கும் பொறுப்பை பிரதமர் நேருவிடமே விட்டுவிடுகிறேன்; மராட்டியருக்கு நேரு நீதி வழங்குவார் என நம்புகிறேன்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாய் நகரின் எதிர்காலம் குறித்து ஒரு ஒருமுக முடிவு மேற்கொள்ளுவதற்காகக் கடந்த சில நாட்களில் தான் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள் முறிந்து போனதற்காக அவர் மிகவும் வருந்துபவராகக் காணப்பட்டார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

கழகப் பற்றுடைய தையற்கலை வல்லுநர் கவனிக்க:

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்கள், தெருத்தெருவாய்ச் சென்று திரட்டிய ஆடைகளில் பல கிழிசல் உடையனவாக இருக்கின்றன. அவற்றை நன்கு தைத்துப் பயன்படக்கூடிய தன்மையில் புயலாலும்—வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்ப எண்ணியுள்ளோம். எல்லாம் 'அறிவகத்'தில் குவித்துவைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னையிலுள்ள கழகப் பற்றுடைய தையற்கலை வல்லுநர்கள், பொதுத்தொண்டு செய்யும் கடமையுணர்ச்சியோடு வந்து, இயன்றவரையில் தைத்துக் கொடுப்பார்களாயின் நலம். தையற்பொறியைக் கொண்டுவந்து எடுத்துச் செல்லுவதற்காக ஏற்படும் செலவும், பிறவகையில் ஏற்படும் செலவுகளும் அவர்களுக்குத் தரப்படும். அத்தகைய தொண்டுசெய்ய முன்வரும் தோழர்களுக்குத் தலைமைக்கழகத்தால் நற்சான்று இதழ் வழங்கப்பெறும். அத்தகைய தோழர்கள் 'அறிவகத்'திற்கு உடனடியாக வருகை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

குறிப்பு: தொண்டுபுரிய முன்வந்திருப்பவர்:—

தோழர் உலகநாதன், அன்பன் தையல் நிலையம், வண்ணை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

6 சர்க்கரை ஆலைகள்

சென்னையில் துவங்க மத்திய சர்க்கார் அனுமதி

இரண்டு — தனிப்பட்டவர்களாலும், நான்கு—கூட்டுறவு ஸ்தாபனங்களாலும் ஆக மொத்தம் ஆறு புதிய சர்க்கரை ஆலைகளைத் துவக்குவதற்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்கிவிட்டனர் என்று தெரியவருகிறது.

தனிப்பட்டவர்களால் துவக்கப் படவிருக்கும் இரண்டில், ஒன்று திருச்சி குளித்தலை தாலுகா பேட்டைவாய்த்தலை எனும் இடத்தில் துவக்கப்படும் என்றும், அதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது என்றும், இங்கு தினம் ஒன்றுக்கு 800 டன் சர்க்கரை உற்பத்தியாகும் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—1—'56 சனி

பாங்கி ஊழியர் போராட்டம்

கடந்த எட்டாண்டுகளுக்கு மேலாக இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிவரும் ஆட்சி, ஜனநாயக அடிப்படையில் இயங்கி வரும் ஒன்று என்பதாக ஜனநாயகத்தின் உயர்ந்த நோக்கத்தை—அதன் சீரிய பலன்களை அறிந்தோர் ஒப்பமாட்டார் என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தியத் துணைக் கண்டத்து மக்களில் அரசியல் விழிப்புணர்வு பெற்ற அனைவரும், எட்டாண்டுக் கால ஆட்சி நடைமுறையை அனுபவித்தபின், அந்த உண்மையை உணர்ந்தே இருக்கின்றனர்.

பண்டித நேரு ஆட்சிப் பீடத்தின் நாயகராக விளங்குகிறார் என்பதாலேயே ஆட்சியில் ஜனநாயக மணம் கமழும் என்று யாரேனும் நம்பினால், அது தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டதாகத்தான் அமையும்.

ஆட்சிப் பொறுப்பிலிருப்போர், தங்கள் கையில் அதிகாரம் கிடைத்துவிட்டிருக்கிறது என்பதால், தங்களுக்கு மாறுபட்ட கொள்கையும் கருத்தும் உடையோரது சொல்லுக்கும் செவிசாய்க்க வேண்டும் என்ற ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களுள் ஒன்றை அறவே புறக்கணித்துவிட்டார்கள் என்பதுமட்டுமல்ல — தங்களுக்கு எதிரான கொள்கையும், கருத்துமுடையவர்களை அடக்கி ஒடுக்குவதிலேயே தங்கள் கையில் உள்ள அதிகாரத்தைச் செலவிட்டும் வருகிறார்கள் என்பதை, கண்ணுடையோர் கண்டுதான் உள்ளனர்.

ஆளவந்தார்களின் இந்தப் போக்கினை உறுதி செய்வதாகத்தான், பாங்கி ஊழியர் போராட்டம் இருக்கிறது.

பாங்கி ஊழியரின் இப்போதைய வேலைநிறுத்தப் போராட்டத்தின் நீண்டகாலப் பின்னணி நுணுகி ஆராயப்படும்போது, இந்தியப் பேரரசினர், 'ஜனநாயகம்', 'சோஷலிசம்' என்ற சொற்களுக்குத் தரும் ஆபாசமான பொருள் விளக்கங்களையும், அந்த விளக்கங்களுள் ஆழ்ந்து அமிழ்ந்து கிடக்கும் ஏகாதிபத்திய—முதலாளித்துவ உள்ளுணர்வுகளையும், பூதக் கண்ணாடிபோலப் பெரிதாக்கி, தெளிவாகக் காட்டக் கூடியதாகும்.

பாங்கி ஊழியர்களுக்கும்—முதலாளிகளுக்கும் ஊழியர்களது சிலபல கோரிக்கைகளை ஒட்டித் தகராறு; அந்தத் தகராறைத் தீர்த்துவைப்பதற்காக இந்தியப் பேரரசு தொழில் நீதிமன்றம் ஒன்றை நியமித்தது.

உண்மையில், 'நாங்கள் தொழில் நீதிமன்றம் ஒன்றை நல்லெண்ணத்துடன்தான் நியமித்தோம்; நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஊழியர்களும்—முதலாளிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அந்தத் தீர்ப்பை அமுல் செய்ய வேண்டியது எங்களது பரம நியாயமான கடமை' என்று இந்தியப் பேரரசு கூறிக்கொள்ள அருகதை அற்றது என்பதைத்தான், தொழிலாளர் மந்திரியாயிருந்த வி. வி. கிரி அவர்களது பதவி விலகல் கூறுகிறது. அல்லவா?

தாங்கள் நியமித்த தொழில் நீதிமன்றத் தீர்ப்பை, தாங்களே அவமதித்தனர்—இந்தியப் பேரரசின் மூலவர்கள். பின்னர் ஊழியர்கள் போராட்டத்திற்குப் பணிந்து, மீண்டும், தகராறை ஒரு குழுவின் விசாரணைக்கு அனுப்புவதாக அவர்கள் அறிவித்தனர்; ராஜதயாக்ஷா என்ற நீதிபதி, பாதி விசாரணையின்போதே இயற்கை எய்தியபின், அவரைத் தொடர்ந்து கஜேந்திரகத்கர் என்ற நீதிபதி தகராறை விசாரித்துவிட்டு தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இத்தனை நடவடிக்கைகளுக்குப் பிறகும், பாங்கி ஊழியரில் மிகப் பெரும்பாலானோர் தங்கள் குறைகள் தீர்க்கப்படவில்லை என்று போராட முற்படுகிறார்கள் என்றால், எட்டாண்டுகளாக, ஒரு முக்கியமான—உயிரோட்டம் மிகுந்த தொழில் ஒன்றில், முதலாளிகளுக்கும் — ஊழியர்களுக்குமிடையே உள்ள தகராறுகள் தீர்க்கப்பட முடியவில்லை என்றால், இந்த நிலைக்கு என்ன பெயரிட்டு அழைப்பது?

தகராறு குறித்து தொழில் நீதிமன்றம் தந்த தீர்ப்பை அவமதித்தது—அந்த இழிசெயலை எதிர்த்த மந்திரியின் விலகலை வெட்கமின்றி ஏற்றுக்கொண்டது—புதிய விசாரணைக் குழுக்களை நியமித்தது—இவை எல்லாம், இந்தியப் பேரரசின் நல்லெண்ணமின்மை, ஜனநாயகம் என்ற போர்வையில் மேற்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய—முதலாளித்துவ ஆட்சி முறை இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகத்தான் இருக்கின்றன.

ஏற்கனவே தரப்படும் ஊதியத்தில் 'எவ்வித வெட்டும்' இருக்கக்கூடாதென்ற பாங்கி சிப்பந்திகளின் முக்கியமான கோரிக்கையை கஜேந்திரகத்கர் குழு திருப்தி செய்யவில்லை என்று பாங்கி ஊழியர் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

தொழில் நீதிமன்றத் தீர்ப்பை அமுல் செய்யும்போது, பாங்கி ஊழியர் சம்பளத்தில் ஏதேனும் குறைக்க நேர்ந்தாலும், அப்படிப்பட்ட தொகையை எதிர்காலத்தில் தரப்படும் சம்பள உயர்வில் சரிசெய்து கொள்ளவேண்டும்—தற்போதைய சம்பளத் தொகையில் எதுவும் குறைக்க வேண்டாம் என்றுதான் பாங்கி ஊழியர் கோருகின்றனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதில் பாங்கி முதலாளிகளுக்கோ, சர்க்காருக்கோ என்ன நியாயமான கேடு வந்துவிடும் என்பது தெரியவில்லை.

தொழில் நீதிமன்றத் தீர்ப்புப்படி, 'சம்பளக் குறைப்பை' ஏற்றுக்கொள்ளவே ஊழியர்கள் மறுக்கிறார்கள் என்றால், அப்போது வேண்டுமானால் முதலாளிகள் 'கேடு சூழும்' என எண்ணுவதில் பொருள் உண்டு.

"ஏதேனும் 'வெட்டி'க் கொள்ள வேண்டுமானால் இப்போது பெற்றுக் கொண்டிருக்கும் சம்பளத்தில் எடுத்துக் கொள்ளவேண்டாம்; எதிர்காலத்தில் தரப்படவிருக்கிற சம்பள உயர்விலிருந்து பிடித்துக் கொள்ளுங்கள்" என்று மட்டுமே ஊழியர்கள் குரல் கொடுக்கிறார்கள்.

இப்போது பெறும் சம்பளத்தில் ஒரு தொகையைப் பிடிப்பது, ஏற்கனவே அழுத்திக் கொண்டிருக்கும்வாழ்க்கையை மேலும் பாரமானதாக்கும் என்று அவர்கள் கூறுவதில் மிகுந்த நியாயமிருக்கத்தான் செய்கிறது.

'கூலி அல்லது கிராக்கிப் பட உயர்வு வேண்டும் என்று நாங்கள் போராட்டம் தொடங்கவில்லை; கிடைத்து வரும் தொகையைக் குறைக்க முயற்சிப்பதைத்தான் எதிர்த்துப் போராட்டம் துவங்கியுள்ளோம்" என்று அவர்களே கூறியுள்ளதை, சர்க்கார் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இந்தியப் பேரரசினரோ, தங்களது நெருங்கிய நண்பர்களான முதலாளிகளின் பிடிவாதப் போக்கிற்குத் துருத்தி ஊதுபவர்களாக நடந்துகொள்கின்றனர். 'வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது' என்று பேசுகின்றனர். இதுபோன்ற சூழ்நிலைகளில் சட்டம் பேசுவது பலன் தராது. மாறாக, மனித உள்ளத்துடன் நியாயங்களைத் தேடியாக வேண்டும்; அதுதான் பலன் தரும்.

பாங்கி ஊழியர்களின் ஒன்றுபட்ட வேலை நிறுத்தத்தைக் கண்ட பின்பேனும் சர்க்கார், தங்கள் வழக்கமான முறைப்படி, அவர்களது கோரிக்கைகளுக்குச் செவிமடுக்க வேண்டுவதுதான் இப்போதைய சூழ்நிலைகளிடும் கட்டளையாகும்.

மாணவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த மாவட்ட அதிகாரிகள்

மத்திய பாரத் சர்க்கார் நடவடிக்கை

இந்தூர், ஜன. 6—

இந்தூர் மாணவர்மீது கடந்த ஆண்டு ஜூலை மாதம் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சம்பந்தமாக, மாவட்டக் கலெக்டர், மாவட்டப் போலீஸ் சூப்பரின்டெண்ட் ஆகியோர் உட்பட 9 அதிகாரிகள் மீது, மத்திய பாரத சர்க்கார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்படி நபர்கள் பதில் தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக இரு ஜூனியர் அதிகாரிகள் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ளனர். கலெக்டரும், மாவட்டப் போலீஸ் சூப்பரின்டெண்டும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

(வேலையிலிருந்து ஓய்வு பெற்ற கல்லூரித் தலைவரை மீண்டும் வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டுமெனக்கோரி, மாணவர்கள் கடந்த ஜூலை 19, 20 21-ந்தேதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தது நினைவிருக்கலாம். அப்போது நடந்த போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 பேர் மாண்டனர்.)

சென்னை — விழுப்புரம் மின்சார இரயில்பாதை

மூன்றரை கோடி ரூபாய் திட்டத்தில் வேலை துவக்கம்

சென்னை, ஜன 6—

எழும்பூர்—விழுப்புரம் இடையே மின்சார இரயில்பாதை அமைக்கும் திட்டம், மத்திய ஆட்சியின் ஒப்புதலைப் பெற்றுவிட்டதாம்!

இதுபற்றி கூறிய இந்திய சர்க்கார் இரயில்வே துணை அமைச்சர், மூன்றரைக் கோடி ரூபாய் செலவாகக் கூடிய இததிட்டத்தில், அடுத்த மூன்று மாதங்களில் வேலை ஆரம்பமாகிவிடக் கூடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மின்சார வசதி அதிகரிப்பு

சென்னையின் அடுத்த திட்ட ஏற்பாடுகள்

சென்னை. ஜன. 5—

ரூ 30 கோடி செலவாகும் குந்தா நீர்விசை மின்சாரத் திட்ட துவக்கம் இம்மாத இறுதியில் நடைபெறலாம் ஆரம்ப வேலைகள் ஏற்கனவே நடைபெற்றுவருகின்றன.

திட்டம் 1960-ல் பூர்த்தியாகும்; 1 30,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும்.

பெரியாறு மினசார விநியோக வேலைகள் ஏற்கனவே நடைபெற்றுவருகின்றன. 1958-ல் விநியோகம் ஆரம்பமாகும். இத்திட்டத்தால் 1,82,000 கிலோவாட் மின்சாரம் கிடைக்கும்

சென்னையில் தற்போது விநியோகிக்கப்படும் மின்சாரம் 2,50,000 கிலோவாட்டாகும்; குந்தா, பெரியாறு திட்டங்கள் பூர்த்தியானதும் இது இரட்டிப்பாகிவிடும்.

பேசின் பிரிட்ஜ் மின்சார நிலயத்தில் 30,000 கிலோவாட் உற்பத்தி செய்யும் இயந்திரம் அமைக்கப்பட்டு வருகிறது; இதற்கு ரூ 1½ கோடி செலவாகும் 1957 இறுதியில் உற்பத்தி தொடங்கிவிடும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 61½ கோடிக்கு மேல் செலவாகக்கூடிய பல மின்சாரத் திட்டங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன. இதில் கிராமங்களின் மின்சார விஸ்தரிப்புக்காக ரூ 12 கோடி செலவிடப்படும்.

கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிடபில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கும் சென்னை, இரண்டாவது திட்டக் காலத்தில் 2,500 கிராமங்களுக்கு மின்சகரம் சப்ளை செய்யும் ஏற்கனவே சுமார் 3 000 கிராமங்கள் மினசாரம் உபயோகித்து வருகின்றன.

எல்லை உரிமைக் கோரிக்கை

மத்திய சர்க்காருக்கு தமிழ்ப் பெருமக்கள் அனுப்பியிருக்கின்றனர்

"திருவிதாங்கூர்-கொச்சி மலபார் மாநிலத்தில் இருக்கும் தமிழகத்தை ஒட்டியுள்ள தமிழ்த் தாலுக்காக்களான தோவாளை, அகத்தீசுவரம், கற்குளம், விளவங்கோடு, செய்யாற்றங்கரை, நெடுமங்காட்டின் கிழ்ப் பகுதி, செங்கோட்டை, தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், பாலக்காடு ஆகியவையும், ஆந்திர மாநிலத்திலுள்ள சித்தூர், புத்தூர், திருத்தணி, பல்லவனேரி, திருக்காளத்தி, திருப்பதி(சந்திரகிரி), புங்கனூர், கங்குந்தி ஆகியவையும் நியாயமாகத் தமிழகத்தோடு சேரவேண்டிய பகுதிகளாகும். இங்கு வசிக்கும் மிகப் பெரும்பான்மையோர் தமிழர் ஆவர். கடந்த காலத்தில் பல தேர்தல்கள் மூலம் அவர்கள் தங்கள் கருத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். அன்றியும், தாயகத்துடன் சேரவேண்டும் என்பதற்காக நீண்டநாட்களாகப் போராடிக் கொண்டும் வருகிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் கோரிக்கையை விடாது எடுத்துரைத்ததற்காக மிகுந்த கொடுமைக்கும் ஆளாகியிருக்கிறார்கள்.

"ஒரு குறிப்பிட்ட மொழி பேசுவோர் அனைவரையும் ஓர் எல்லைக்கு உட்படுத்தி, அவர்தம் தாய் மொழியிலேயே ஆட்சிபுரிய வைப்பதுதான் மக்கள் எண்ணத்தை மதித்து நடக்கும் குடியாட்சி முறையாகும். ஆகவே, வரலாற்று முறைப்படியும், மொழியின் அடிப்படையிலும், தொடர்ந்தாற்போல் ஒட்டியிருப்பதாலும் மேற்சொன்ன மிகப் பெரும்பான்மையான தமிழ் மொழி வழங்கும் பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு எவ்விதத் தடங்கலுமின்றி உடனடியாகச் சேர்க்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

"இங்ஙனம் குடி தழுவிக் கோலோச்சுதல் செய்யாமல், ஆட்சி பீடத்தில் இருப்போர் மக்கள் கோரிக்கையைப் புறக்கணித்துத தமிழருக்கு உரியதைப் பிறருக்கு வேறு காரணம் கூறி வழங்க முடிவு செய்தால், அதனால் அமைதி குலைந்து பெருங்கொந்தளிப்பும், எல்லைப் போராட்டமும் ஏற்பட வழிகோலும் என்று அஞ்சுகிறோம்"

—என்று பிரபல தமிழர்கள் கையொப்பமிட்ட கோரிக்கை ஒன்று மத்திய அரசாங்கத்திற்கும் சென்னை அரசாங்கத்திற்கும், காங்கிரசு மேலிடத்திற்கும் அனுப்பப் பெற்றிருக்கிறது.

தோழர்கள் மா. சு. சம்பந்தன், ஊ. செயராமன் ஆகிய இருவரும் திரட்டி அனுப்பியுள்ள அந்தக் கோரிக்கையில், தோழர்கள் இரா நெடுஞ்செழியன், சி. என். அண்ணாதுரை, மு. கருணாநிதி, ம. பொ. சிவஞானம், கே. விநாயகம் எம்.எல் ஏ., பி. டி. ராஜன், எம் எல்.ஏ., டாக்டர் மு. வரதராசனார், அன்-புகணபதி, க. அன்பழகன், மு க. செ. முகையதீன இபுறாகிம் சாகிபு, ப. ராமசுவாமி, டாக்டர் எஸ். தருமாம்பாள், கா அப்பாதுரை, பு. செல்வராசன், பரலி. சு. நெல்லையப்பர், எஸ் எம். ஜெகரிய்யா, ஆர். மகாதேவன், எஸ் ஏ. பி அண்ணாமலை, கி வா. ஜெகந்நாதன், ப. கோதண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய நிர்வாகப்பணி

மாநில நிர்வாகத்திலுள்ளோருக்கு அதிக வாய்ப்புகள்

புதுடில்லி, ஜன. 6—

அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் நியமிக்கப்படவிருக்கும் சுமார் 400 ஐ ஏ எஸ் அதிகாரிகளில் பெரும்பாலோர் மாநிலங்களைச் சேர்ந்த மாகாண 'சிவில் சர்வீஸ்'காரர்களாயிருப்பர்; வெளியிலிருந்தும் ஆட்கள் எடுக்கப்படுவர்.

வெளியிலிருந்து எடுப்பதிலும் மாகாண சர்வீஸ்காரர்களைப் போட்டியிட அனுமதிக்கலாமா என்ற பிரச்சினையில, மாநிலங்களிடை கருத்துவேற்றுமை இருக்கிறது; எனவே, மாகாண சர்விசிலிருந்து ஐ. ஏ. எஸ் பதவியில் சேர விருப்புவோரின் வயது வரம்பை 49-லிருந்து 40 ஆக இந்திய சர்க்கார் குறைக்கக்கூடும் எனச் சொல்லப்படுகிறது.

எல்லா அபேட்சகர்களுக்கும் நியாயமான சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்துடன் போட்டிக்கு ஒரு 'அளவுகோல்' வைக்கப்படலாம்—அதாவது, போட்டிக்கு யோக்கியதாம்சமாக ஒரு பூர்வாங்கப் பரீட்சை எல்லோருக்கும் வைக்கப்படலாம் இந்தப் பரீட்சையில் தேறியவர்கள் போட்டிக்கு அழைக்கப்படுவர்; பிறகு இறுதி தேர்வு நடக்கும்.

இந்த யோசனைகள்மீது மாநிலங்களின் கருத்தை கேட்டிருந்ததற்கு இதுவரை ஐந்து மாநிலங்களிடமிருந்துதான் பதில் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்கும் பொருளாதார உதவி

குறைக்கப்படாமலிருக்க ஐசனேவர் முயற்சி

நியூயார்க், ஜன. 5—

அமெரிக்கா, இந்தியாவிற்கு வழங்கிவரும் பொருளாதார உதவி இந்த ஆண்டு ஏற்கனவே கூறப்பட்டபடி குறைக்கப்படமாட்டாது என்றும், உதவியைக் குறைக்காமலிருப்பதற்கான முயற்சியை அமெரிக்கத் தலைவர் ஐசனேவரே மேற்கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

இந்தியாவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தொழில் நுட்ப உதவி (சுமார் ஒரு கோடி டாலர் மதிப்புடையது) பொருளாதார உதவி 7 கோடி டாலர்—மற்றும், ஆசியாப் பிரதேச உதவித் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள 20 கோடி டாலரில் ஒரு பகுதி—என்று, தொடர்ந்து அமெரிக்கா இந்தியாவிற்கு உதவும்

'அமெரிக்க நிர்வாகம், இந்தியாவிற்குத்தரும் உதவியைக் குறைக்க வேண்டும்' என்று கூறிய யோசனையை மாற்றி, ஐசனேவர் ஏற்கனவே திட்டமிட்ட உதவி வழங்க முயற்சித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்கக் கடற்படை

மிகப் பலம் பொருந்தியதாக இருக்கிறதாம்

வாஷிங்டன், ஜன. 5—

"அமெரிக்கா பசிபிக் கடலில் மிகவும் பலமுள்ளதாக—பாதுகாப்புள்ளதாக இருக்கிறது.

"அமெரிக்காவின் 7-வது கடற்படை, எந்த 'வேலை'யைக் கொடுத்தாலும் அதைச் சரிவர நிறைவேற்றும் என்பதில் சந்தேகமில்லை"

என்று, அமெரிக்கக் கடற்படைச் செயலாளரான சார்லஸ் தாமஸ், தூரகிழக்கில் உள்ள கடற்படை முகாம்களைப் பார்வையிட்டுத் திரும்பிய பின் தெரிவித்திருக்கிறார்.

'ஆசியாவில் கம்யூனிஸ்டு கடற்படை பலம் சற்று அதிகரிக்கப்பட்டிருக்கிறது; ஆனால், அதைக் கொண்டு அவர்கள் என்ன செய்ய முயற்சிக்கப்போகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது,' என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

20 நிமிடப் பயிற்சியில் இயக்கும் இயந்திரம்

அமெரிக்கக் கம்பெனியொன்று, சாதாரண பறக்கும் இயந்திரம் ஒன்றைச் செய்துள்ளதாம்; பயிற்சி இல்லாதவன் ஒருவன் 20 நிமிடப் பயிற்சி பெற்று அதனை இயக்க முடியுமாம்; 'பறக்கும் மேஜை' என்று அதனை அழைக்கப்படுகிறது.

அந்த 200 இராத்தல் இயந்திரத்தில் ஒரு மேடை உள்ளது; அம்மேடையில் ஒருவன் கால்வைக்கும் அளவுக்கு இடம் உண்டு; 300 இராத்தல் சுமையைச் சுமந்துகொண்டு, மணிக்கு 65 மைல் வேகத்தில் ஏறக்குறைய 150 மைல் அது செல்ல முடியுமாம்.

அதை இயக்குகிறவன் தன் சரீரத்தை இந்தப் பக்கத்திலாவது அந்தப் பக்கத்திலாவது—முன்னாவது பின்னாவது சாய்த்து, அதை தனக்குத் தேவைப்படும் வழியில் செலுத்தலாமாம்.

வெளியே இருக்கும் 'சுழல் அலகு'களை இயக்கும் 44 குதிரைத் திறன் அமைந்த எஞ்சின் அதற்கு உண்டு.

விந்தையான கோரிக்கை!

வாஷிங்டன், ஜன. 4—

'மனிதப் பிறப்பாக நான் நடத்தப்படவேண்டும்' என்று விரும்புவதால், ரஷ்யக் குடிமகனாக என்னைச் சேர்த்துக்கொள்ளுங்கள்—என்று, அமெரிக்க நீக்ரோ ஒருவர் மனுச் செய்துகொண்டாராம்.

'முதலில் அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்துவிட்டு வாருங்கள்' என்று அவருக்குப் பதில் தரப்பட்டுள்ளதாம்.

நேர்த்தியான ஆடை அலங்காரம்

நேருவின் சோதரி தேர்வு

நியூயார்க், ஜன. 6—

சென்ற ஆண்டில், உலகத்தில் மிக நேர்த்தியாக ஆடை அணியும் மாதர்களில் ஒருவராக, லண்டனிலுள்ள இந்தியத் தூதுவர் திருமதி விஜயலட்சுமி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பூமியைச் சுற்றிவர செயற்கை கோள்

ரஷ்ய விஞ்ஞானிகள் வானில் மிதக்க விடுவர்

லண்டன், ஜன. 6—

வான வெளியில் பூமியைச் சுற்றிவரக்கூடிய ஒரு செயற்கை துணைக் கிரகத்தை இந்த ஆண்டிலேயே ரஷ்யா மிதக்கவிடக்கூடுமென்று தெரிகிறது.

இதற்கு ரஷ்ய விஞ்ஞானிகள் பிரத்தியேக முறை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கின்றனராம்.

உயிருள்ள பிராணிகளை வான வெளியில் அனுப்பினால் அவற்றிற்கு என்ன நேரிடுமென்பதை ஆராய்வதற்காக நாய்களும், குரங்குகளும் வானத்தில் பல மைல்கள் வரை அனுப்பப்பட்டதாகவும். அவை பத்திரமாகத் திரும்பி வந்திருப்பதாகவும், ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார்

சிங்களமொழி வெறியர்கள் ஆர்ப்பாட்டம்!

தமிழுக்கு சமநிலை பெற மக்கள் சபை தமிழ் உறுப்பினர் ஒன்றுபட்ட முயற்சி

கொழும்பு, ஜன. 6—

இலங்கை மக்கள் சபையில் தமிழ் உறுப்பினர்களான 21 பேர்கள் வரும் ஜனவரி 14-ந் தேதியன்று கூடி, தமிழுக்கு சிங்களத்தைப் போல சமநிலை தரவேண்டும் என்ற கோரிக்கைக்காக ஒரு ஐக்கிய முன்னணி அமைப்பது குறித்து யோசிப்பர் என்று தெரியவருகிறது.

மொழிப் பிரச்சினையில் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்று இவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

பிளவுபட்டுக் கிடக்கும் தமிழர்களை, இந்த மொழிச் சிக்கல் ஒன்று சேர்த்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சுதந்திர தமிழ் நாடு வேண்டும்—தமிழுக்கு சமநிலை வேண்டும்—பெடரல் ஆட்சியில் சுதந்திரமான தமிழகம் அமையவேண்டும்—என்று பல வழிகள், கோரிக்கைகள், இந்த மொழிச் சிக்கலை ஒட்டி எழுந்துள்ளது, அறிந்த ஒன்றுதான்.

இன்னும் ஐந்து வாரங்களுக்குப் பிறகு இப்போது ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டின் முடிவுக்கு இந்தச் சிக்கல் விடப்பட்டிருக்கிறது; இதற்கிடையில், பிரச்சினை, நாட்டில் தீவிரமாகிக்கொண்டு வருகிறது.

'லங்கா சுதந்திரக் கட்சி' என்ற சிங்கள இயக்கத்தின் தலைவரான பண்டாரநாயகாதான், 'சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கோருகிறார். அவர், மக்கள் சபையில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் எதிர்த்தாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தனது கட்சியின் முழு ஆதரவையும் தருவதாகக் கூறியிருக்கிறாராம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு நடைபெறவிருக்கிற கெலானியா எனும் இடத்தில் சிங்கள மொழி வெறியர்கள், மாநாடு நடைபெறுவதற்குமுன் பலத்த ஆர்ப்பாட்டம் செய்யத் திட்டமிட்டு வருகின்றனராம்.

சிங்களக் கவிஞர்கள், அரசியல்வாதிகள், மருத்துவர்கள், சன்னியாசிகள் ஆகியோரடங்கிய ஊர்வலம் ஒன்றும் நடத்துவதுடன், ஆர்ப்பாட்டங்கள் நடத்தவும் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

சமரசம் பேசுவதற்கு முன்வருகின்றனர்

பொதுத் தேர்தல்களில் கலந்துகொள்ள முயற்சி

கம்யூனிஸ்டு கட்சியின் ஆவல்

இரங்கூன், ஜன. 4—

பர்மாவில், வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்களில், சட்டபூர்வமான எதிர்க்கட்சி என்ற முறையில் கலந்துகொண்டு, தடை செய்யப்பட்டுள்ள தங்கள் கட்சியை மீண்டும் நிலை நிறுத்துவதற்குக் கம்யூனிஸ்டுகள் முயற்சிக்கின்றனராம்.

சட்ட விரோதமாக்கப்பட்ட பர்மா கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி, அக்கட்சியைச் சட்ட பூர்வமாக்குவது சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறதாம்; ஆனால், ஆயுதங்களைச் சர்க்காரிடம் ஒப்படைக்க முடியாதெனக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தேர்தல் செல்லாதென்ற தீர்ப்பிற்குப் பிறகும் தொடர்ந்து மந்திரியாயிருக்கலாமா?

நாகபுரி நீதி மன்றத்தில் வழக்கு!

நாகபுரி, ஜன. 5—

தேர்தல் செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பின், மாநில மந்திரி சபையில் நிதிமந்திரியாயிருக்கும் பிரிஜ்லால் பியாணி தொடர்ந்து பதவியிலிருப்பது கூடாதெனவும், அவரை பதவியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு உத்தரவிடுமாறும் கோரி நாகபுரி உயர் நீதிமன்றத்தில் உள்ளூர் கம்யூனிஸ்டுத் தலைவர் ஒருவர் மனு ஒன்று தாக்கல் செய்திருக்கிறாராம்.

'மத்தியப் பிரதேச மாநிலத்தில் அவர் மந்திரியாக இருக்கக் கூடாது; சர்க்கார் 'கெஜட்'டில், தேர்தல் நீதிமன்றத் தீர்ப்பு பிரசுரமான பின்னும் இவர் சட்ட சபையில் உட்கார அனுமதிக்கப்படுவது கூடாது; அவர் உடனே மந்திரிப் பதவிப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்,'

என்றும் மனுவில் கூறப்பட்டிருக்கிறதாம்.

புயல் நிவாரண நிதி

சென்னை 42-வது வட்ட தி. மு. க. தோழர்கள் வசூல்

புயல் நிவாரண நிதிக்காக சென்னை 42-வது வட்ட தி மு கழகச் சார்பில் தோழர் திராவிடவீர சினன் தலைமையில் ஊர்வலமாகச் சென்று பொதுமக்களிடமிருந்து ரூ 283-9-0-ம், 1,542 துணிகளும் வசூல் செய்தனர்.

வெளிவந்துவிட்டது!

கோனூர் தமிழ்க் கையகாதி

[வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனூர்]

மாணவர்க்கும் மற்றையோர்க்கும்
உற்ற துணைவன்! சிறந்த வழிகாட்டி!
ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்க வேண்டிய புத்தகம்!
20,000 வார்த்தைகள் — 508 பக்கங்கள் — அழகிய தோற்றம்
உயர்ந்த கையடக்கப் பதிப்பு
விலை ரூபாய் மூன்று
பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை-5 :: திருச்சிராப்பள்ளி

கழகச் செய்திகள்

சென்னை 46-வது வட்ட தி. மு. கழகம்

31—12—55ல் கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், கழக இடத்தை பெரியதாக்கி பழுது பார்ப்பதற்கென நியமித்த குழுவினர், செலவு ரூ. 58—4—8-க்கு சமர்ப்பித்ததை ஏற்றுக்கொண்டும், அக்குழுவினருக்கு நன்றி தெரிவித்தும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபமும் தெரிவித்துக்கொண்டதுடன், மற்றும்பல முக்கியதீர்மானங்கள் செய்யப்பட்டன.

திருப்பூந்துருத்தி தி.மு.க.

1—1—56 இரவு 9 மணிக்கு, கழக உறுப்பினர் கூட்டம் தோழர் வா. அ மைதீன் பாட்சா தலைமையில் நடைபெற்றபோது, கழகத்தின் தற்காலிகச் செயலாளர்களாக தோழர் வஹாப்ஜி, வி. கே. பிச்சையா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், புயலால் பாதிக்கப்பட்டோருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. விரைவில் பொதுக் கூட்டமொன்று நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அனுதாபம்

சென்னை 43-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. பார்த்தசாரதி அவர்களுடைய பெரிய தகப்பனார் மறைவுக்கு வருந்துவதுடன், இவையின் சார்பில் அன்னாருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்வதாக அவ்வட்டக் கழகச் செயலாளர் மு. புரட்சிமணி அறிவிக்கிறார்.

சென்னை 19-வது வட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம்

4—1—56 இரவு 9 மணிக்கு, தோழர் இராமய்யா தெரு வீதியில் 19-வது வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் — தோழர் எல். எ. அன்புக்கரசு தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கே. எ. இராமய்யா, எம். என். வி. பதி, கே டி. அமிர்தம் ஆகியவர்கள் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகவும், செயற்குழு உறுப்பினர்களாக 13 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 13—1—56-ல், 'கழக ஆண்டு விழா', 'பொங்கல் விழா' இரண்டையும் சிறப்பாக நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நிலவரியில் உபரி வரி விதிப்பு

கர்னூல், ஜன 5—

நிலவரியில் உபரி வரி விதிப்பதற்கான மசோதா ஒன்றை ஆந்திர மாநில சர்க்கார் கொண்டுவரவிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

ரூபாய் ஒன்றுக்குக் குறைவான நிலவரிக்கு இந்த உபரி வரி இருக்காது என்று கூறப்படுகிறது.

ரூபாய் ஒன்று முதல் ரூ. 10-வரை உள்ள நிலவரிக்கு ரூபாய்க்கு ஒரு அணா வீதம் உபரி வரி விதிக்கப்படும்; ரூ. 10 முதல் ரூ. 100-வரை உள்ள நிலவரிக்கு ரூபாய்க்கு இரண்டணா வீதம் வரி விதிக்கப்படும்; ரூ. 100 முதல் ரூ 500-வரை உள்ள நிலவரிக்கு ரூபாய்க்கு காலணா வீதமும், ரூ. 500-க்கு மேற்படும் வரிக்கு ரூபாய்க்கு 8 அணா வீதமும் உபரி வரி விதிப்பு இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மலேரியா ஒழிப்பில் மைசூருக்கு முதலிடம்

பெங்களூர், ஜன. 5—

மலேரியா, மற்றும் கொசு சம்பந்தமான நோய் ஒழிப்பு வேலைகளைத் தீவிரமாக மேற்கொண்டு சிறப்பாக அதனைச் செய்து முடித்திருப்பதற்காக இவ்வாண்டிலும் மைசூர் மாநிலத்திற்கு 'இந்திய தேசிய சொசைட்டி'யின் 'கேடயம்' அளிக்கப்பட்டுள்ளது. மலேரியா ஒழிப்பு வேலைகளுக்காக ஆண்டுதோறும் இந்தக் 'கேடயம்' பரிசாக வழங்கப்பட்டுவருகிறது.

நிர்வாகக் கண்காணிப்பு நிறுவனம்

இலஞ்ச ஊழலைத் தடுக்கவாம்!

புதுடில்லி, ஜன. 6—

இந்திய சர்க்கார் ஊழியரிடை இலஞ்ச ஊழல்களைத் தடுக்கவும், நிர்வாகத் திறனைப் பெருக்கவும் நிர்வாகக் கண்காணிப்பு நிறுவனம் ஒன்றை இந்திய சர்க்கார் நிறுவியிருக்கின்றனர்.

இந்த நிறுவனம் இயங்கி, அதன் மூலம் கிடைக்கும் அனுபவத்தின் மீது உள்நாட்டிலாகாவின் விசேடப் போலீஸ் நிறுவனத்தைப் பலப்படுத்தும் பிரச்சினை ஆராயப்படும்.

இந்தத் திட்டத்தின்படி, ஒவ்வொரு மந்திரி சபை இலாகாவுக்கும் ஒரு கண்காணிப்பு அதிகாரி இருந்து, அந்த இலாகாவில் இலஞ்ச ஊழல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்.

எல்லாக் கண்காணிப்பு அதிகாரிகளும், உள்நாட்டிலாகா நிர்வாகக் கண்காணிப்புப் பிரிவு டைரக்டரின் கீழும், அந்தந்த இலாகா காரியதரிசி ஆலோசனை கேட்டும் பணியாற்றுவர்.

பிரெஞ்சுப் பொதுத் தேர்தல்

கட்சிகளின் இறுதி நிலை

பாரிஸ், ஜன. 6—

பிரெஞ்சுத் தேர்தல்கள் நடைபெற்று முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன.

முன்னாள் பிரதமரான மெண்டே பிரான்ஸ், தனது ராடிகல் கட்சியும், சோஷலிஸ்டுக் கட்சியும், கூட்டாகச் சேர்ந்து மந்திரி சபை அமைக்கவேண்டும் என்று கருத்தறிவித்திருக்கிறார்.

இந்தத் தேர்தலிலும் எந்த ஒரு தனிக்கட்சியும் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றவில்லை. பத்து கட்சிகளும், ஏராளமான சுயேச்சைகளும் தேர்தலில் போட்டியிட்டனர்.

594 இடங்கள் உள்ள மக்கள் சபையில் 150 இடங்களைக் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றியிருக்கின்றனர். இவர்கள்தான் தனி ஒரு கட்சி என்ற முறையில் அதிகமான இடங்களைப் பிடித்திருப்பவர்கள்.

இந்தத் தேர்தலில் குறிப்பிடத்தகுந்த வெற்றி பெற்றிருப்பவர்கள் கம்யூனிஸ்டுகளும், வரி எதிர்ப்பு இயக்கத்தவரான 'பௌஜாதிஸ்ட்' கட்சியினரும்தான்.

தேர்தல் இறுதி நிலவரங்கள் வருமாறு:—

கம்யூனிஸ்டுகள்	150
சோஷலிஸ்டுகள்	98
ரேடிகல் (ஆதரவானர்)	9
ரேடிகல் (தீவிரவாதிகள்)	49
ரேடிகல் (கருத்து வேறுபாடு கொண்டோர்)	21
ரிபப்ளிகன்	72
கன்சர்வேடிவ்	96
சோஷியல் ரிபப்ளிகன்	22
பௌஜாதிஸ்ட்	52
தீவிரவலதுசாரிகள்	8
இதரர்	22

ரேடிகல் கட்சித் தலைவரான மெண்டே பிரான்ஸ், மற்றும், சோஷலிஸ்டு கட்சிப் பொதுச்செயலாளரான எம். மொல்லெட் ஆகிய இருவரும், தேர்தலின்போது கூட்டாக இரு கட்சிகளும் சேர்ந்து போரிட்டதைப்போன்றே இப்போதும் தங்கள் இரு கட்சியினரும் கூட்டாகச் சேர்ந்து மந்திரிசபை அமைப்பது குறித்து யோசித்து வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

'ரிபப்ளிகன் முன்னணி' என்ற பெயரில் அவர்கள் கூட்டுச் சேர்ந்து தாய்நாட்டில் மகத்தான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவது என்றும், வட ஆப்பிரிக்காவில் பிரான்சிற்கு உள்ள தகராறுகளைத் தீர்ப்பது என்றும் உறுதி தந்திருக்கின்றனராம்.

நடராசப் பிள்ளைக்கு 'மூக்கறுப்பு'

சந்தித்துப் பேச நேசமணி மறுப்பு

திருவனந்தபுரம், ஜன. 6—

தென் திருவாங்கூர் தமிழ் தாலுகாக்கள் கேரளத்துடனேயே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக, முன்னாள் ம சோ. கட்சி மந்திரியான நடராச (பிள்ளை) என்ற தமிழர், தோழர் நேசமணியைச் சந்திக்கவேண்டும் என்று கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதிய தோழர் நேசமணி, தான் அவரைச் சந்திக்க விரும்பவில்லை என்று தெரிவித்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்

மாநில மாநாட்டு நிதி அளிப்புக் கூட்டம்

அண்ணா கலந்துகொள்கிறார்

8—1—56 மாலை 6 மணிக்கு சென்னை-பெரம்பூர் திரு. வி. க. திடலிலேயே (கான்ரான்ஸ்மித் நகர்) பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள், தோழர் டி. எஸ். சண்முகம் தலைமையில், தி.மு. கழக மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பார்கள்.

தோழர்கள் சி. என். அண்ணாதுரை, இளம்பரிதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்.

ரூ. 500 கோடிக்கு 'சிறு சேமிப்பு' இலக்கு!

புதுடில்லி, ஜன. 6—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 'சிறு சேமிப்பு'கள் மூலம் ரூ. 500 கோடிக்கு முதலீடுகள் திரட்டுவதற்கு 'இலக்கு' நிர்ணயித்திருப்பதாக இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக் செய்தியொன்றில் கூறியுள்ளாராம்.

சென்னையில் திராவிடர் திருநாள்

கிளைக் கழகங்களின் கவனத்திற்கு:

"இவ்வாண்டு திராவிடர் திருநாள் விமரிசையான விழாவாக, சென்னை-சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பார்க்கில் கொண்டாடப்படவிருக்கிறது. இசை விருந்தும், நாடக விருந்தும் செவிக்கும் சிந்தனைக்கும் களிப்பூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"ஆண்டுதோறும் சிறப்புற நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்றுள்ளன. வெற்றி பெறுகிறவர்களுக்கு, தோழர் கே. ஆர். இராமசாமியின் முதற் பரிசுகளும், இரண்டாம் பரிசுகளும், மூன்றும் பரிசுகளும வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இதோடல்லாமல், எந்தக் கிளைக் கழகம் எல்லா போட்டிகளிலும் பெருவாரியான தோழர்களை கலந்துகொள்ளச்செய்து பெருமிதமான வெற்றியை அடைகிறதோ, அக்கிளைக்குத் தோழர் மு. கருணாநிதியின், 'உலாவரும வெண் பொற்கலம்' (ரோலிங் கப்) பரிசாக வழங்கப்படும் என்பதை உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"போட்டியில் கலந்துகொள்ள நினைக்கும் தோழர்கள், கிளைக் கழகச் செயலாளர்களின் உரிமைச் சீட்டுடனும், ஒவ்வொரு போட்டிக்கும் எட்டணா கட்டணத் தொகையுடனும், இராயபுரம், 'அறிவகத்'தில் இன்றே வந்து பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று, சென்னை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

சென்னை 4-வது வட்ட தி.மு.கழக நிர்வாக உறுப்பினர்க்கு

8—1—56 காலை 10 மணிக்கு, சென்னை 4-வது வட்ட தி. மு கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு, பொங்கல் விழா, உறுப்பினர்கள் சேர்த்தல் ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும்.

பம்பாய் மாநிலத்தில் பெனிசிலின் உற்பத்திச்சாலை

ஐ. நா. நிறுவனத்தின் உதவி விவரம்

ஐ நா. உதவியால் இந்திய அரசாங்கம் தென் கிழக்கு ஆசியாவின் முதல் பெனிசிலின் தொழிற்சாலையை அமைத்து முடித்துவிட்டதாம்.

பம்பாய் மாநிலத்தில் பிம்பிரி எனும் இடத்திலுள்ள அந்தத் தொழிற்சாலை 30 இலட்சம் டாலர் மதிப்புள்ளது அதில் உற்பத்தி செய்யப்படுபவை எல்லாம் இந்தியாவில உபயோகிப்பதற்காகும்; பொது சுகாதாரத் திட்டங்களுக்கு அவை முதலில கொடுக்கப்படும.

இறக்குமதி செய்த சாதனங்களுக்கு ஐ. நா குழந்தைகள் அவசர நிதி நிறுவனம் 8,50,000 டாலர் வழங்கியது. ஆராய்ச்சிப் படிப்புக்குரிய உபகாரச் சம்பளம், திட்டம் அமைத்தல், எஞ்சினீயரிங், கட்டிடம் ஆகியவற்றிற்கு அமெரிக்கத் தொழில நுட்ப உதவி நிர்வாகம் 3,00,000 டாலர் கொடுத்தது; கட்டிடத்துக்கும், வேலைகளுக்கும் அந்த இடத்தில் கிடைத்த எல்லாப் பொருள்களுக்கும் இந்தியா போட்ட மூலதனம் 20 இலட்சம் டாலராகும்.

இன்றைய மாணவர்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கில் இலட்சியம் எதும் இல்லாதவர்களாயிருக்கின்றனர்"

என்று, போபால் முதன் மந்திரி டாக்டர் ஷங்கர் தயாள் சர்மா என்பார் கூறியிருக்கிறார்.

உள்ளூர் பள்ளி ஒன்றின் பரிசளிப்பு விழாவின்போது பேசிய அவர் மேலும், 'இப்போதுள்ள கல்வி முறை சிலர் கூறுவதைப் போல அத்தனை கெட்டதல்ல; இன்று மாணவர்களுக்குக் கல்வி கற்றுத்தரப்படும்போதுள்ள சூழ்நிலை நல்லதாக இருக்கவில்லை; அதனால்தான், கல்வித் திட்டத்தை—முறையைக் குறை கூறுகிறார்கள்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

'ஆசைத் தங்கை'

7—1—56 இரவு 9½ மணிக்கு, சென்னை-சௌந்தர்ய மகாலில், வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக நூல் நிலைய நிதிக்காக, தோழர் மு. கருணாநிதி தலைமையில், தமிழ் இசை இளைஞர் கலா மன்றத்தார் அளிக்கும் 'ஆசைத் தங்கை'—சமூக நாடகம் நடைபெறும்.
கட்டணம்: ரூ. 5, 3, 2, 1.

இரங்கற் கூட்டம்

8—1—56 மாலை 5 மணிக்கு, சென்னை-பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில், சென்னைக் கல்விச் சங்கத்தின் ஆதரவில், பாரி பாக்கம் கண்ணப்ப(முதலியார்) அவர்கள் மறைவு குறித்து திரு. த வே. முருகேசனார் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெறும். திருவாளர்கள். தொ. ரா. ஜெயராமன், க. வீ. குருசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

8—1—56 பிற்பகல் 2 மணிக்கு, சென்னை 7-வது வட்டம் (பேசின் பிரிட்ஜ்) மூலக்கொத்தளம் அழகிரி மன்றத்தில், தோழர் சி ச. பன்மொழியன் தலைமையில் நடைபெறும். 'சீர்திருத்தம்' எனும் பொருள் பற்றி மூ. மா. முத்து, வெ வ. வேந்தன் ஆகியோர் பேசுவர்.

* * *

தமிழ்ப் பகுதிகள் இணைப்பு

(S. R. C. REPORT & TAMILS)

மாபெரும் பொதுக்கூட்டம்

8—1—56 மாலை 5-மணிக்கு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

★

தலைவர்: **திரு. கசபதி நாயகர்,** எம்.எல்.சி.

சொற்பொழிவாளர்கள்:

பி. டி. இராசன் எம். எல். ஏ.
டாக்டர் மு. வரதராசனார்
இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்
ஏ. இரத்தினம் எம். எல். ஏ.
டி. சண்முகம் எம். எல். ஏ.
ஜி. இராசமன்னார் எம். சி.
எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை, எம். எல். ஏ.
எஸ். எச். பிளச்சர்—மற்றும் பலர்

திரு-கொச்சி, மலபார், ஆந்திரா தமிழ்ப் பகுதித் தமிழக இணைப்புப் பற்றி பேசுவர்.

—தமிழ்ப் பகுதிகள் இணைப்புக் குழு

* * *

மலைக் குன்றுகளைக் கைப்பற்றிவிட்டனர்?

புதுடில்லி, ஜன 6—

பாகிஸ்தான் — ஆப்கன் எல்லையில், சையத் குல்சாகிப் எல்லைப்புறக் காவல் சாவடியைச் சுற்றியுள்ள எல்லா மலைக் குன்றுகளையும் மகமுண்ட் தேசிய முஜாஹித்கள் கைப்பற்றிவிட்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

பாகிஸ்தான் எல்லைப்புற மாகாணத்தில் தனி பக்துனிஸ்தான் கோரும் முஜாஹித் சாதியினருக்கும் - பாகிஸ்தான் துருப்புகளுக்கும் கடந்த டிச. 24-ல் கடுமையான சண்டை நடந்ததென்றும் கூறப்பட்டுள்ளது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமன், அழ. வள்ளியப்பா, தமிழ் ஒளி, வ. சுப்பையா(பிள்ளை), ச. பொன்னுசுவாமி; அ. செல்லப்பர், டி. கே. சண்முகம் முதலியோரைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கானோர் கையொப்பமிட்டிருக்கின்றனர்

உயர்நிலை பள்ளிகளில் ஆங்கில மொழி கட்டாயமாகும்?

புதுடில்லி, ஜன. 7—

ஜனவரி 11-ந் தேதியன்று இங்கு நடைபெறவிருக்கும் அ இ உயர்நிலைக் கல்விக் குழுக் கூட்டத்தில், உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தை ஒரு கட்டாயப் பாடமாக்கும் பிரச்சினை பற்றியும், பரீட்சை முறையை மாற்றியமைப்பது பற்றியும் பரிசீலனை செய்யப்படுமெனத் தெரிகிறது.

16,000 நிலமற்ற விவசாயிகளுக்கு 80,000 ஏகர் நிலம் தரப்பட்டது

ஐதராபாத் மாவட்டத்தில் நிலச் சீர்திருத்தம்

செகந்திராபாத், ஜன. 6—

நிலமில்லாத விவசாயிகளாக இருந்த 16,000 பேர் கம்மாம் மாவட்டத்தில் நிலம் பெற்றிருக்கிறார்கள். 432 நிலச்சுவான்தார்களிடமிருந்து பெறப்பட்ட 80 000 ஏகர் நிலம் தலைக்கு 5 ஏகர் விதம் பிரித்துத் தரப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலேயே முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட 'புரட்சிகரமான' நிலச் சீர்திருத்தம் இதுதான் என்று கூறப்படுகிறது.

கடந்த கிழமையில் முதன் மந்திரி ராமகிருஷ்ணராவ் இவர்களுக்கு நில உரிமைகளுக்கான 'பட்டா' பத்திரங்களை வழங்கினார்.

வேறு எல்லா மாநிலங்களிலும் உள்ள சர்க்கார்கள் இந்த மாதிரி நிலச் சீர்திருத்தம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளுவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதாக முதன் மந்திரி அந்த விழாவில் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

எள்ளுவிதை: இலவசமாக விநியோகிக்க உத்தரவு

பட்டுக்கோட்டை தாலுகாவிலும் கிடைக்கக்கூடும்

சென்னை, ஜன 7—

ரூ 20-ம், அதற்குக் குறைந்த வரியும் செலுத்தும் பட்டுக்கோட்டை தாலுகாவிலுள்ள குடியானவர்களுக்கு இலவசமாக எள்ளு விதைகள் விநியோகிக்குமாறு சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றது. முன்னரே அறந்தாங்கி தாலுகாவுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

ஈரான் மன்னர் தம்பதிகள் இந்தியா வருகை

புதுடில்லி, ஜன. 7—

ஈரான் மன்னரான முகம்மது ரெஜா ஷா பஹ்லெவி தனது இராணியாருடன், வரும் பிப்ரவரி 18-ந் தேதி இந்தியா வருவார் என்று தெரிய வருகிறது.

மூன்று வார காலம் இந்தியாவில் தங்கும் அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் பிரசாதின் அழைப்பின்பேரில் வருகின்றனராம்.

ஜெர்மன் குடியரசின் துணைப் பிரதம மந்திரி

இந்தியாவுக்கு வருகிறார்

ஜெர்மன் குடியரசு சர்க்காரின் துணைப் பிரதம மந்திரி டாக்டர் பிரான்ஸ் ப்ளுசெர், ஜனவரி 10-ந் தேதியன்று இந்தியாவுக்கு வருகிறார். அவர் இந்நாட்டில் 11 நாட்கள் தங்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ